
# பனிமயம்



டிசம்பர் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

டிசம்பர் மாதமும், திருவருகைக் காலமும் தொடங்கியுள்ளன. கிறிஸ்துமஸ் விழா நெருங்கி வருகிறது. கிறிஸ்துமஸ் என்றாலே மகிழ்ச்சிதானே?

முதல் கிறிஸ்துமஸ் விழாவின்போது வானதூதர்கள் இடையர்களிடம் சொன்ன செய்தி என்ன? “அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் **மகிழ்ச்சியூட்டும்** நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்” (லூக் 2:10) என்றுதானே குழந்தை இயேசுவின் பிறப்பை அறிவித்தார்கள். அந்த மாபெரும் மகிழ்ச்சி இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவின்போது உங்கள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறேன், இறைவனை வேண்டுகிறேன்.

நம் கடவுள் “நன்மைகள் பல செய்கிறார்; வானிலிருந்து உங்களுக்கு மழையைக் கொடுக்கிறார்; வளமிக்க பருவ காலங்களைத் தருகிறார்; நிறைவாக உணவளித்து உங்கள் உள்ளங்களை **மகிழ்ச்சி** பொங்கச் செய்கிறார்” (திப 14:17) என்ற பவுலடியாரின் சொற்களுக்கிணங்க, கிறிஸ்துமஸ் விழாவின்போது குழந்தை இயேசு உங்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கச் செய்வாராக.

“**மகிழ்ச்சியோடு** எதிர்நோக்கியிருப்பது நிறைவேறும் எனக் காத்திருக்கிறோம். நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப்போகிறது” (தீத் 2:13) என்ற நம்பிக்கையோடும், எதிர்நோக்கோடும் இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவோமாக!

நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை உங்களை மகிழ்ச்சியால் நிரப்புவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 23 தாரகை 4

'பனிமயம்'

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### இலாப நோக்கமற்றத் தன்னார்வ நிறுவனங்களுக்காக...

மனித மேம்பாட்டுக்காக அர்ப்பணித்துள்ள தன்னார்வ இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் பொதுநலனுக்காக அர்ப்பணித்த மக்களைக் கண்டறிந்து, பன்னாட்டு ஒத்துழைப்புக்கான புதிய பாதைகளை இடைவிடாமல் தேட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. கிபேஹோவின் துயரங்களின் அன்னை! ..........4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்..........6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னைப் புனிதர்கள் :
புனித பொனவெந்தூர்..........8
அருள்பணி. குமார்ராஜா

4. கன்னி மரியிடம் பிறந்தவர்! ..........10
கலாபன் வாஸ்

5. பனிமய அன்னை -
உறைபனி அன்னை ..........12
தி. சொர்ணராஜன் விக்டோரியா

6. நம் திருஅவை, நமது பெருமை
நேர்த்தியான நிறுவனம்!..........14

7. விவிலியப் போட்டி ..........16

8. மாதம் ஒரு மாதா படம் ..........19

9. பனிமயப் பகிர்வு..........20

10. 2022 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள் ..........23

11. பனிமய சாட்சியம்..........25

புதிய காட்சிகள் : 1

மரியன்னை மலர்கள் : 5

# கிபேஹோவின் துயரங்களின் அன்னை!



பாத்திமா, லூர்து போன்ற புகழ்பெற்ற மரியன்னைத் திருத்தலங்களெல்லாம் ஐரோப்பாவில் உள்ளன. ஆப்ரிக்க கண்டத்தில் அன்னை மரியா காட்சி தந்த இடம் எது என்று தெரியுமா?

ஆப்ரிக்காவின் ருவாண்டா நாட்டிலுள்ள கிபேஹோ திருத்தலம்தான் அந்த சிறப்புக்குரியது. அது மட்டுமல்ல, கிபேஹோ திருத்தலம் ஒன்றுதான் கத்தோலிக்கத் திருஅவையின் ஒப்புதல் பெற்ற ஒரே ஆப்ரிக்க மரியன்னை காட்சித் திருத்தலம்.

அங்கு மரியன்னை காட்சி தந்தார் என்ற செய்திகள் பரவியபோது, அவற்றை ஆய்வு செய்யப் பணித்தது திருஅவைத் தலைமை. தொடர் விசாரணை மற்றும் ஆய்வுகளுக்குப் பின்னர், 2001ஆம் ஆண்டு ஆயர் அகஸ்டின் மிசாகோ அவர்களால் இந்தக் காட்சிகளின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. ஆயரின் அறிவிப்பை வத்திக்கான் ஏற்றுக்கொண்டு கிபேஹோவை "துயரங்களின் அன்னை திருத்தலமாக" அறிவித்தது.

1981, நவம்பர் 28ஆம் நாள் கிபேஹோ என்னும் கிராமத்தில், 16 வயது அல்போன்சின் என்னும் சிறுமிக்கு அவள் படித்த பள்ளியில் அன்னை காட்சி தந்தார். கத்தோலிக்கப் பள்ளியில் படித்த, மறைக்கல்வி பெற்ற சிறுமியான அல்போன்சின் காட்சியில் கண்ட அழகிய பெண் அன்னை மரியா என்று உணர்ந்துகொண்டாள். மரியா தம்மை "வார்த்தையின் அன்னை" என்று சிறுமிக்கு வெளிப்படுத்தினார். அன்னையின் செய்தி வழக்கமான ஒன்றுதான்: "**மனமாற்றம்.** அது ஒன்றுதான் விரைவில் வரப்போகிற போரைத் தடுத்து நிறுத்தும்".

இந்தக் காட்சி அனுபவத்தை அவள் பகிர்ந்தபோது, சிறுமியின் வார்த்தைகளை யாரும் நம்பவில்லை. குறிப்பாக, அவளது சக மாணவியர் அவளைக் கேலி செய்தனர். எனவே, மறுமுறை அன்னை காட்சி தந்தபோது மற்ற மாணவியருக்கும் அன்னை காட்சி தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தாள் அல்போன்சின்.

அன்னை மரியா அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். அடுத்ததாக 1982, ஜனவரி 12ஆம் நாள் நத்தாலி என்னும் 13 வயது சிறுமிக்கு அன்னை காட்சி தந்தார்கள். "துன்பமும், இடைவிடா மன்றாட்டுமே" நத்தாலிக்கு அன்னை தந்த செய்தி. மரியே கிளேர் என்னும் இன்னொரு மாணவி அல்போன்சினை கிண்டல் செய்துகொண்டே இருந்தாள். அதனாலோ என்னவோ, 1982, மார்ச் 2ஆம் நாள் மரியே கிளேர் என்னும் அவளுக்கும் அன்னை காட்சி தந்து அவளையும் வியக்க வைத்தார்கள். "செபமாலை, ஏழு வியாகுலங்கள் என்னும் இரு பக்தி முயற்சிகளையும் கடைப்பிடியுங்கள்" என்பதே அவளிடம் அன்னை கொடுத்த செய்தி.

தொடர்ந்து, இந்த மூன்று சிறுமிகளுக்கும் அன்னை காட்சி தந்தார்கள். குறிப்பாக, அல்போன்சினுக்கு அதிக காட்சிகள் கிடைக்கப் பெற்றன. 1989, நவம்பர் 28 வரை இந்தக் காட்சிகள் நீடித்தன. மனமாற்றம் இல்லாவிட்டால், மிகப் பெரிய அழிவு நேரிடும் என்று இவர்கள் முன்னுரைத்தனர்.

அது ஓர் இறைவாக்கு முன்னறிவிப்பு என்று அப்போது யாருக்கும் தெரியவில்லை. ஆனால், விரைவில் அது நிறைவேறியது. 1994-95ஆம் ஆண்டுகளில் ருவாண்டாவில் இனப் போர் ஏற்பட்டு எட்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டபோது, அன்னையின் செய்தியை அனைவரும் உணர்ந்தனர்.

ருவாண்டாவில் பெரும்பான்மை இனக் குழுக்களான டுட்சி மற்றும் ஹஜட்டு இன மக்கள் ஒருவரோடொருவர் போரிட்டு இனப் படுகொலையில் ஈடுபட்டனர். இதற்கிடையில், மரியே கிளேர் திருமணமாகி கிகாலி என்னும் இடத்தில் கணவரோடு வசித்து வந்தார். 1994 ஏப்ரலில் நடைபெற்ற இனப்போரில் இருவரும் கொல்லப்பட்டனர். மரியன்னை காட்சி தந்த கிபேஹோ கிராமத்திலேயே ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

மரியன்னையை முதலில் கண்ட அல்போன்சின் இன்று புனித கிளேர் துறவற சபை அருள்சகோதரியாகி விட்டார். நத்தாலி பாதுகாப்பு கருதி கன்னியர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கிபேஹோ திரும்பி, அன்னையின் திருத்தலத்தில் திருப்பணியாற்றி வருகிறார்.

கிபேஹோ திருத்தலத்தைப் பிரபலமாக்கிய இன்னொரு பெண் இம்மாக்குலே இலிபகிசா. தற்பொழுது அமெரிக்காவில் வசிக்கும் 50 வயது நிரம்பிய இம்மாக்குலே ருவாண்டா இனப்படுகொலைகளைக் கண்ணால் கண்டவர். தன் குடும்பத்தினர் அனைவரையும் இழந்தவர். அன்புள்ளம் கொண்ட ஒரு மனிதரால் 3 மாதங்கள் ஓர் அறையில் ஒளித்து வைக்கப் பட்டதால், தப்பிப் பிழைத்தவர். பின்னர், அமெரிக்கா சென்ற அவர் "ருவாண்டா படுகொலை நடுவே கடவுளைக் கண்டேன்" என்னும் தன்-வரலாற்று நூலை எழுதிப் பிரபலமானார். அவரால் ருவாண்டா படுகொலைகளும், கிபேஹோ திருத்தலமும் அனைவருக்கும் தெரிய வந்தன. தனது கத்தோலிக்க இறைநம்பிக்கையே தன்னைக் காப்பாற்றியது என்றும், தன் குடும்பத்தைக் கொன்றவர்களையும் மன்னிக்க வைத்தது என்றும் வலிமையாக சான்று பகர்ந்துள்ளார்.

இன்று அன்னை காட்சி தந்து 40 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால், ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் கிபேஹோ திருத்தலத்தை நாடி வருகின்றனர். தங்கள் துயரத்திலிருந்து விடுதலையும், ஆறுதலும் பெறுகின்றனர். அன்னை முதலில் காட்சி தந்த நவம்பர் 28 அன்று 25,000 திருப்பயணிகள் திரள்கின்றனர். அன்னையின் பெயரால் அங்குள்ள ஊற்றிலிருந்து புதுமைத் தண்ணீர் பிடிக்க வரிசையில் நிற்கின்றனர். அன்னை இன்றும் புதுமைகள் செய்து கொண்டிருக்கிறார்.

**அருள் மரி வேந்தன்**

19



# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...


அருள்தந்தை M.J. இருதயராஜ் அடிகளார் 1990ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை பரிசுத்த பனிமய மாதா ஆலய பங்குத் தந்தையாகவும் பசிலிக்கா அதிபராகவும் திறம்பட பணியாற்றினார்கள். அவருடைய காலத்தில் சிலுவைக் கோயிலில் ஆவிக்குரிய கூட்டம் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை மதியமும் அதுவுமல்லாமல் மாதத்தின் முதல் சனியன்று முழு இரவு ஜெபம் போன்ற பக்தி முயற்சிகளும் நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருந்தன. சகோதரர் ரிச்சர்டு தலைமையில் சிலுவைக் கோயில் ஜெபக்குழு மிகுந்த ஆர்வத்தோடும் பக்தியோடும் நடத்தி வந்த வழிபாடுகளில் குரூஸ்புரம், திரேஸ்புரம் போன்ற பங்குமக்கள் தவறாமல் திரளாகக் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அருள்தந்தை இருதயராஜ் அவர்கள் மிகவும் கண்டிப்பானவர் மாத்திரமல்ல அனாவசிய ஆடம்பரங்களை விரும்பாதவர். அவசியமில்லாத செலவுகளை தவிர்த்து வெகு சிக்கனமாக பங்கின் வரவு செலவுகளை கவனித்து வந்தார்.

முதல் முறையாக அடிகளார் சிலுவைக் கோயிலுக்குச் சென்றபோது அவர் கேட்ட கேள்வி "ஏன் தெருவைவிட இரண்டு அடி பள்ளமாக இருக்கிறது?" "குன்றுகளின் மேல் கோயில்களும் கோட்டைகளும் அமைப்பதே இயல்பு - இங்கோ பள்ளத்தில் போய் கட்டியிருக்கிறார்களே!" என்று ஆதங்கப் பட்டதாக அவர் சொல்லக் கேட்டதாக சிலர் சொன்னார்கள். அதன் பின்னணியைத் தெரிந்து கொள்ள வாசகர்கள் சிறிது வரலாற்றைத் திருப்பிப் பார்க்க வேண்டும்.

முத்துக்குளித்துறையில் சில குருசடிகள் வணக்கத்துக்குரியவைகளாகவும் சிற்றாலயங் களாகவும் மாற்றமடைந்திருப்பதை பலரும் அறிவர். குருசடிகள் ஏன் எவ்வாறு எங்கெங்கே தோன்றின என்பதை பார்க்க வேண்டும்.

போர்த்துக்கல் மன்னர் ஹென்றி (King Henry the Navigator) 1415ஆம் ஆண்டு இந்தியாவுக்கு ஒரு புதிய கடல்வழித் தடத்தைக் கண்டறிய Sines என்ற கடற்கரைக் கிராமத்திலிருந்து திறமைமிக்க மாலுமிகளைத் தெரிந்தெடுத்து ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றிச் செல்ல அனுப்பிவைத்தார். அவர்களின் கடல்பயண முன்னேற்றத்தைக் குறிக்க கரைகளில் மரத்தினாலான சிலுவைகளை நாட்டிச் சென்றார்கள். 83 ஆண்டுகால விடா முயற்சியின் பயனாக 1498ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் சாமூத்ரி ராஜா ஆண்ட ஏறநாட்டு தலைநகர் கோழிக்கோடுக்கு வடக்கே கப்பாடு என்ற இடத்தை வாஸ் கோ த காமா வந்து அடைந்தார். அதைத் தொடங்கி வைத்த மன்னர் என்றி 1460ஆம் ஆண்டு மரணமடைந்தாலும் 1462ஆம் ஆண்டு அடுத்து வந்த மன்னர் (Juan) மீண்டும் தொடங்கி 5 மாலுமிகள் முயன்று தோற்றபின் கண்ட வெற்றி. போர்த்துக்கேயர் மரத்தினாலான குருசுகளையும் 'பத்ரோன்' (Padrone) என்றழைக்கப்பட்ட கல்குருசுகளையும் தாங்கள் கண்டுபிடித்த



புதுஇடங்களில் நாட்டிச் செல்வது வழக்கம். அதோடல்லாமல் கரையில் அடையாளமாக (Land Mark) மதி வைப்பதற்கும் (for taking bearing), நங்கூர வாடிகளுக்கு (mooring points) இறங்கு தளங்களுக்கு (Landing places), குடியிருப்பு எல்லைகளில் (boundaries) என சிலுவைகளை நாட்டுவது வழக்கம்.

உலாந்தர் படை எடுப்பின்போது தூத்துக்குடியிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட கத்தோலிக்க பரதவர், 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலாந்தரோடு ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக, தாங்கள் முன்பிருந்த குடியிருப்பின் வடக்கிலும் தெற்கிலும் குடியமர்ந்தனர். தெற்கு குடியிருப்பான பீச்ரோடு கிரக்கோப் தெரு மணல் தெரு இவை மேட்டுபாகம் – தெற்கு எம்பரர் தெரு அவற்றைவிட 5½ அடி பள்ளத்திலும் சன் பேதுரு தெரு தெற்கு எம்பரர் தெருவைவிட 4½ அடி பள்ளத்திலும் இருப்பதால் அதுவே குடியிருப்பின் எல்லையாக இருந்திருக்க வேண்டும். அதற்கும் மேற்கே கயத்தாறு பாளைய வெட்டும்பெருமாளின் காவல் படையும் கம்பளத்து நாயக்கரின் வடுக காவல்கூடமும் (இன்றுகூட மறக்குடியில் பிரமுத்து தேவர் சந்து, நாயக்கர் தெரு என இருப்பதைக் காணலாம்) இருந்தன. எனவே சிலுவைக் கோவிலில் இருக்கும் மரச்சிலுவை குடியிருப்பின் எல்லையைக் குறிப்பதற்கு நாட்டப்பட்டதாக இருக்கலாம் (காண்க 'Cruzadies - a mental meandering 48 by JHS Merinda).

திருச்சிலுவை இரட்சண்யத்தின் அடையாளமாக இருப்பதால் அதை வணக்கத்துக்குரியதாகவே கருதுவர். அந்த இடத்தில் பக்திக்குரிய ஏதாவதொன்று எழுப்பப்படுவது இயல்பு. சிற்றாலயத்துக்குள் இருந்த திருச்சிலுவைமீது எண்ணெய் பூசுவதும் மெழுகுதிரிகள் ஏற்றப்படுவதையும் கண்ட அருள்தந்தை இருதயராஜ் – ஜெபக் குழுவினர் நடத்தும் அருங்கொடைக் கூட்டங்களின் வரவேற்பையும் கண்டு, சிறிதாகவும் பலகாலமாக பழுதுபார்க்கப்படாமலும் இருந்த சிற்றாலயத்தை சீர்படுத்த நினைத்தார்.

அந்த நினைவுகளே விசாலமான அழகிய ஆலயமாக வடிவம் கொடுக்க வித்திட்டது. ஏறத்தாழ இரண்டாண்டு கால உழைப்பின் பயனாக அருள்தந்தை தன் கனவுகளில் கண்ட ஆலயத்தை கட்டி எழுப்பினார். அவருக்கு முன்பு பொறுப்பிலிருந்த அருள்தந்தையர்கள் பல திருப்பணிகளைச் செய்திருந்தாலும் முன்பு அதிகமாக பயன்படாதிருந்த சிலுவைக் கோயில் இன்று ஏழைகள், ஆதரவற்றோர், பசிப்பிணியால் வாடுவோர், மதிய உணவுக்காக கூடுமிடமாகவும், நோயுற்றோரின் நேர்ச்சைக் கடன் செலுத்துமிடமாகவும் முழு இரவு ஜெப ஆலயமாகவும், செவ்வாய்க்கிழமை தோறும் ஆவிக்குரிய கூட்டங்கள் நடக்கும் ஆலயமாகவும் மக்களின் ஆன்மீக திருப்பயண வாழ்வின் நடுவமாகவும் திகழ்கிறது.



**செல்வராஜ் மிராந்தா**

# புனித பொனவெந்தூர்

**(1221 - 1274)**

## மரியன்னையைப் பின்பற்றிய திருஅவை வல்லுநர் – கர்தினால்



புனித பொனவெந்தூர் பதிமூன்றாம் நூற்றாண்டின் மாபெரும் புனிதர்களுள் ஒருவர். பல்வேறு சிறப்புகளுக்குச் சொந்தக்காரர். பாரிஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராய்ப் பணியாற்றிய கல்வியாளர். பிரான்சிஸ் அசிசி தோற்றுவித்த பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து துறவியாகி, அதே சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதியவர். இறைவார்த்தையை வலிமையுடன் போதித்த நற்போதகர். ஆயராகவும், பின்னாளில் கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டவர். அவரது போதனைகள், எழுத்துக்களுக்காக “திருஅவை வல்லுநர்” என்று போற்றப் படுபவர். இத்தனை சிறப்புகள் மிக்க இந்த பிரான்சிஸ்கன் துறவி மரியன்னைமீது பெரும் பற்றுதல் கொண்டிருந்த ஒரு மரியன்னைப் புனிதர் என்பது அன்னையின் பிள்ளைகளுக்கு மகிழ்வைத் தருகிறது.

இத்தாலியின் பக்னோரெஜியோ என்னும் இடத்தில் ஜியோவான்னி ஃபிடன்சா, மரிய ரிடெல்லா தம்பதியின் மகனாக 1221ஆம் ஆண்டு பிறந்தார். ஜான் என்று பெயர் சூட்டப்பட்டார். குழந்தைப் பருவத்தில் நோயுற்று சாகும் தறுவாயில் இருந்தபொழுது, புனித பிரான்சிஸ் அசிசியாரின் இறை வேண்டலால் நலம் பெற்றிருக்கிறார். பிரான்சிஸ்கன் சபையில் துறவியான பிறகு பொனவெந்தூர் என்று பெயர் மாற்றம் பெற்றார். இறையியல், மெய்யியல் சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார். “கடவுளை நோக்கிய ஆன்மாவின் பயணம்”, “வாழ்வின் மரம்”, “புனித பிரான்சிசின் வரலாறு” ஆகிய நூல்கள் புகழ்பெற்றவை, பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டவை.

அவரது ஆளுமை, தூய வாழ்வு, நிர்வாகத் திறமை ஆகியவற்றின் காரணமாக, பிரான்சிஸ்கன் சபையின் ஏழாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சபையின் ஒழுங்குகளை சீர்படுத்தி, மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தார். பிரான்சிஸ்கன் துறவியரில் ஒரு தூணாகக் கருதப்படுகிறார்.

அவரது முன்னோடியான புனித பிரான்சிசைப் போலவே, பொனவெந்தூரும் அன்னை மரியாமீது பெரும் பற்று கொண்டிருந்தார். அன்னை மரியாவுக்கென்று பல மன்றாட்டுகளையும் இயற்றியுள்ளார். “கன்னிமரியின் கண்ணாடி” என்னும் நூலில் அன்னை மரியின் மேன்மைகளை விரிவாக எழுதியுள்ளார். “அன்னை மரியின் அருள் ஆன்மாக்களில் இரக்கத்தைக் கொணர்கிறது, பாவிகளை மனந்திருப்பி திருஅவையில் இணைக்கிறது” என்று எழுதினார்.

பழைய ஏற்பாட்டின் ரூத்தை மரியாவின் முன்னோடியாகக் காட்டுகிறார் புனித பொனவெந்தூர். வயலில் சிந்தும் கதிர்களைப் பொறுக்குவதற்காக போவாசின் வயலுக்குச் சென்ற ரூத்மீது போவாஸ் பரிவுகொள்கிறார். அப்போது ரூத் அவரிடம், "ஐயா, கருணைமிகும் கண்கொண்டு நோக்குகின்றீர். உம்முடைய பணிப்பெண் அல்லாத என்னைக் கனிமொழி கொண்டே தேற்றுகின்றீர்" (ரூத் 2:13) என்று சொல்லும் மறுமொழி அன்னை மரியாவைக் குறிக்கிறது என்கிறார் பொனவெந்தூர்.

மேலும், வயலில் சிந்தப்பட்ட தானியங்களை ரூத்து பொறுக்கியதுபோல, கடவுளின் விளைநிலத்தில் அருள் பணியாளர்கள், ஆசிரியர்களால் சிந்தப்பட்ட ஆன்மாக்களை அன்னை மரியா சேகரிக்கின்றார் என்கிறார் அவர். என்னே ஓர் அழகிய விளக்கம்! அருள்பணியாளர்களால் பாவிகள் என்று கைவிடப்பட்ட, ஒதுக்கப்பட்ட ஆன்மாக்களை இரக்கத்தோடு சேகரிக்கும் புதிய ரூத்துவாக அன்னை மரியாவைப் பார்க்கும் பொனவெந்தூரின் புதிய பார்வை எத்துணை பாராட்டுக்குரியது!

சீராக்கின் ஞானநூலில் நல்ல மனைவியின் சிறப்பியல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. "ஒரு மனைவியிடம் விளங்கும் நன்னயம் அவள் கணவனை மகிழ்விக்கும். அவளிடம் காணப்படும் அறிவாற்றல் அவன் எலும்புகளுக்கு வலுவூட்டும்" (சீஞா 26:13) என்னும் வரிகளுக்கு விளக்கம் தரும் பொனவெந்தூர் புனித கன்னி மரியாவே அந்த மனைவி என்றும், "ஆண்டவராகிய நான் விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளேன். ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கின்றாள்" (எரே 31:22) என்று எரேமியா முன்னறிவித்த அந்தப் பெண்ணும் மரியாவே என்கிறார்.

எல்லா மரியன்னைப் புனிதர்களையும் போலவே, புனித பொனவெந்தூரும் அன்னை மரியாவுக்கென்று சிறப்பு மன்றாட்டுகளை இயற்றினார். "மரியன்னையிடம் ஒப்படைப்போம்" என்னும் மன்றாட்டு இப்படித் தொடங்குகிறது:

"நன்மைகள் நிறைந்த கன்னியே, இரக்கத்தின் அன்னையே, என் உடல், ஆன்மா, என் சிந்தனைகள், என் செயல்கள், என் வாழ்வு, என் சாவு அனைத்தையும் உம்மிடம் ஒப்படைக்கிறேன். ஓ என் அரசியே, எனக்கு உதவும். தீமைகள் அனைத்தினின்றும் என்னைக் காப்பாற்றும். உம் அன்புத் திருமகன் இயேசுகிறிஸ்துவை உண்மையாகவும், முழுமையாகவும் அன்பு செய்ய எனக்கு உதவும். இயேசுவுக்கு அடுத்தபடியாக உம்மையே என் முழு இதயத்துடன் அன்பு செய்யும் அருளை எனக்குப் பெற்றுத் தாரும், ஆமென்".

என்னே அருமையான மன்றாட்டு! ஒரு மறைவல்லுநரால் உருவாக்கப்பட்டது என்று எத்துணை தெளிவாகத் தெரிகிறது!

"அமைதியில் இளைப்பாற" என்று தலைப்பிடப்பட்ட இன்னொரு மரியன்னை மன்றாட்டு இதோ: "புனித கன்னியே, என் ஆன்மா என் உடலைவிட்டுப் பிரியும்போது, அதைச் சந்திக்கவும், ஏற்றுக்கொள்ளவும் தயைகூர்வீராக. மரியே, அந்நேரத்தில் உம் இனிய பிரசன்னத்தால் தாங்கப்படும் அருளை எனக்கு மறுக்காதேயும். விண்ணகத்தின் ஏணியாகவும், வழியாகவும் எனக்கு இருந்தருளும். எனக்கு மன்னிப்பையும், முடிவில்லா இளைப்பாறுதலையும் உறுதிப்படுத்தும், ஆமென்"

ஜூலை 15ஆம் நாள் புனித பொனவெந்தூரின் விழா கொண்டாடப் படுகிறது. துறவியாகவும், திருஅவைக் கர்தினாலாகவும், மறைவல்லுநராகவும், அதே வேளையில் அன்னை மரியாவின் அன்பு மகனாகவும் வாழ்ந்த இப்புனிதரை நாமும் பின்பற்றுவோம்.



அருள்பணி. குமார்ராஜா

# கன்னி மரியிடம் பிறந்தவர்!



“இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்துக் கன்னிமரியிடமிருந்து பிறந்தார்” – என்று நம்பிக்கைப் பிரமாணத்தில் எடுத்துரைக்கிறோம்.

இயேசுவின் மனிதப் பிறப்பு, உலக வரலாற்றில் நிகழ்ந்த மிகச் சிறப்பான நிகழ்ச்சி. பிறக்குமுன்னே அவரது வருகை அறிவிக்கப் பட்டது. “ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்” – எசாயா 9:6.

**‘இயேசு’** என்ற எபிரேயச் சொல்லுக்கு ‘இரட்சகர்’, ‘மீட்பர்’ என்று பொருள் – மத்தேயு 1:21.

**‘கிறிஸ்து’** என்றால், அருள்பொழிவு பெற்றவர் (மெசியா).

**‘இம்மானுவேல்’** என்பது இயேசுக் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட மற்றொரு பெயர். எபிரேய மொழியில், ‘இறைவன் நம்மோடு’ என்பது பொருள்.

மனிதர்களாகிய நம்மோடு வாசம் பண்ணுவதே ஆண்டவருக்கு விருப்பம். ஆதியிலே இறைவன் மனிதனை உண்டாக்கியபோது, அவருடைய சாயலில் தான் உண்டாக்கினார் (காண்க : தொநூ 1:27). தமது சாயலிலே உண்டாக்கப்பட்ட ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் வைத்த ஆண்டவர், ஒவ்வொரு நாளும் உலாவக் கடந்து வருவார். அவர்களோடு பேசினார். அவர்கள் பேசியதைக் கேட்டார். அவர்களோடு வாசம் பண்ணினார். ஆனால், அந்த ஆதி மனிதர்கள் பாவம் செய்ததினால், இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்டனர். என்றாலும், மனிதர்களோடு ஒன்றித்திருக்க இறைவனின் உள்ளம் ஏங்கியது. எனவே, மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்டு, அவர்களோடு வாசம் பண்ண, அவரே மனிதனாகப் பிறந்தார். “மானிடராய் அவர் வெளிப்படுத்தப்பட்டார்” – 1திமொ 3:16.

கன்னி மரியிடம் கபிரியேல் வானதூதர் மங்கள வார்த்தை சொன்னபோதே, பிறக்கப் போகும் குழந்தையின் பெயர் உச்சரிக்கப்பட்டு விட்டது.... “கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்” – லூக்கா 1:31.

படைப்பிறைவனைப் புறந்தள்ளி விட்டவர்கள்மீது பரிவிரக்கம் கொண்டு, தம் ஒரே மகனை மீட்பராக அனுப்புகிறார் தந்தைக் கடவுள். “நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல; மாறாக,

அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது" - 1யோவா 4:10. பாவங்களை நீக்கவே அவர் தோன்றினார்...." - 1யோவா 3:5.

இறைவனின் அன்பை நமக்கு உணர்த்துவதற்காக இயேசு மனிதராகப் பிறந்தார். "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" - 1யோவா 4:9.

**கன்னிப்பெண் கருத்தாங்கினாள்**

மனுக்குல மீட்பிற்காக விண்ணவர் மண்ணகத்தில் பிறக்க வேண்டும் என்பது தந்தைக் கடவுளின் திட்டம். அப்படிப் பிறந்தவர், மாசுமருவற்ற கன்னிப் பெண்ணிடம் பிறக்க வேண்டும். இஸ்ராயேலில் ஒரு யூதப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தார். கலிலேயாவிலுள்ள நாசரேத் ஊரில் அந்தப் பெண் இருந்தாள். ஆயிரக்கணக்கான பெண்கள் இருக்க, கன்னிப் பெண் மரியாவை ஏன் தேர்ந்தெடுத்தார்? எளியவர்.... வலிமை யற்றவர்..... வார்த்தையை மதித்து ஏற்பவர் என்ற நிலையிலேயே மரியா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"ஆண்டவரில் மனத்தாழ்மையும் ஏழ்மையும் கொண்டோர் நம்பிக்கையோடு மீட்பை அவரிடமிருந்து எதிர்பார்த்து அதைப் பெறுகின்றனர். இவ்வாறு மீட்புப் பெறுவோர் நடுவில் மரியா சிறந்து விளங்குகின்றார். இறுதியாக, சீயோனின் மாண்புமிக்க மகளான அவரோடு, வாக்குறுதியை எதிர்பார்த்திருந்த நீண்ட காலம் முடிந்து, புதிய திட்டம் உருவாக்கப்பெறுகிறது" - சங்க ஏடுகள், **'திருச்சபை' - எண்** : 55.

**மாசற்ற உற்பவம்**

கருவான முதல் நொடியிலிருந்தே தனிச் சிறப்பான தூய்மையின் மாட்சியால் அணி செய்யப்பட்டிருந்த நாசரேத்துக் கன்னியை, கடவுளின் ஆணையால் தூது சொல்ல வந்த வானதூதர், 'அருள்மிகப் பெற்றவரே' (லூக்கா 1:28) என்று வாழ்த்துகின்றார். இக்கன்னியும், "நான் ஆண்டவரின் அடிமை; உமது சொல்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:36) என மறுமொழி கூறுகின்றார். இவ்வாறு, ஆதாமின் மகளாகிய மரியா, கடவுள் வாக்குக்கு இசைவு அளித்ததால், இயேசுவின் தாயானார். பாவத் தடையின்றித் தன் முழு இதயத்தோடு கடவுளின் மீட்புத் திருவுளத்தை ஏற்றுத் தன் மகனுக்கும், அவரின் அலுவலுக்கும் தம்மையே ஆண்டவரின் அடிமையாக மீட்புத் திட்டத்தில் மரியா பணி புரிந்தார்.

★ "ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிச்சு, மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப் பட்டது. நம்பிக்கையின்மையால், கன்னி ஏவாள் கட்டியதை, நம்பிக்கையால் கன்னி மரியா அவிழ்த்துவிட்டார்" எனவும்; ஏவாளோடு ஒப்பிட்டு, மரியாவை **'வாழ்வோரின் தாய்'** எனவும்;

★ "ஏவாளால் சாவு, மரியாவால் வாழ்வு" - எனவும் திருச்சபையின் பழங்காலத் தந்தையர் புகழ்ந்துரைக்கின்றனர்.

★ படைக்கப்பட்டவர்களில் எல்லாம் உன்னதமானவராக, மரியா இறையருளால் நிரப்பப்பட்டார்.

★ கீழைத் திருச்சபைத் தந்தையர், கடவுளின் தாயாம் மரியாவை, 'THE ALL HOLY' ('PANAGIA') **'மிகப் பரிசுத்தமானவர்'** என்று புகழாரம் சூட்டுகின்றனர்.

★ நற்செய்தி நூல்களில் **'இயேசுவின் தாய்'** எனக் குறிப்பிடுகின்றனர். எலிசபெத்தம்மாள், 'என் ஆண்டவரின் தாய்' என்கிறார் - லூக் 1:43, யோவா 21:19-25, மத் 13:55.

இயேசுவின் மனித வாழ்வு நமக்கெல்லாம் எடுத்துக்காட்டான முன்மாதிரிகையான வாழ்வாகும் 'முழுமையான மனிதன்' அவர் (தி.ச. 38; உரோ 15:5, பிலி 2:5). அவருடைய சீடர்களாக வாழ நம்மை அழைக்கிறார்.



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 26

# உறைபனி அன்னை

**உறைபனி அன்னை**

உலகெங்கும் அன்னை மரியாள் தந்துள்ள காட்சிகளை அழகொழுக கவிநயத்தில் **'அருள் நிறை மரியம்மை காவியம்'** என்று படைத்த **கவிஞர் துரை மாலிறையன்,** உரோமாபுரியில் அன்னை மரியாள் அருளிய அருட்காட்சியை **'உறைபனி அன்னை அருளிய படலம்'** என்று தனது காவியத்தில் கீழ்வாறு வர்ணித்துள்ளார்.

**உலகில் தோன்றிய அன்னையின் புகழ்**

பார்தனில் வரங்கள் பெற்ற பலப்பல மண்ணில் அன்னை
நேர்வந்து காட்சி தந்து நிறையருள் பொழிந்த சீரை
ஆர்வந்தான் தோன்றத் தோன்ற அளித்திட முயல்வேன்; பாட்டுச்
சீர்வந்து செந்த மிழ்தன் செம்மையும் விளங்கு மாறே!

**ஒளியோடும் தோன்றிய உறைபனி அன்னை**

உயர்புகழ் உரோமில் அண்ணல் ஒளியேசு நாதர்க் குப்பின்
இயன்ற**நான் காம்நூற் றாண்டில்** இல்வாழ்க்கை நடத்தி யோருள்
முயற்சியும் உழைப்பும் கொண்ட முன்னவர் **சான்**என் பார்தம்
செயல்நல மனைவி யோடும் செம்மையாய் வாழ்ந்து வந்தார்.

**அமைதியான வாழ்க்கை வாழ்ந்தார்**

கடவுளின் மேல்நல் பற்றும் கொண்டவர்; கல்வி கற்றும்
தடபுடல் எனவா ழாமல் தகுதியாய்ச் செழிக்க வாழ்ந்து
படர்வளச் செல்வம் சேர்த்தார்; பணிவுடன் வாய்மை கண்டார்
கடன் எவை? எனவே கண்டு கணக்குடன் வாழ்ந்த போதும்;

**பிள்ளையில்லையே என வேண்டினர்**

"பெறுகின்ற செல்வத் துள்ளே பேறெனும் பிள்ளைச் செல்வம்
வருகின்ற வரமே இன்றி வாடினார்; வாழ்க்கை மீதில்
உறுகின்ற இன்ப மெல்லாம் உயர்வில்லை; தூக்கிக் கொஞ்ச
ஒருசின்ன மழலை வேண்டும் ஒளிதேவா!" எனப்ப ணிந்தார்;



**அன்னை தோன்றினார்**

ஆண்டுகள் பலஇவ் வாறாய் ஆகி **ஆகச்டு நான்கில்**
வேண்டிய இருவர் முன்னும் விளக்கமாய் அன்னை தோன்றி,
"வேண்டினீர்! அன்பீர்! நீங்கள் விரைந்தொரு கோயில் கட்டத்
தூண்டவே வந்தேன் ஆங்கே தோன்றும் **எஸ்கலின் குன்றத்தில்**"

**இவ்விடத்தில் கோயில் கட்டுக**

“பனிஎனச் சூழ்ந்து காட்டும் பகுதியில் கட்டு” என்று
நனிஒளி காட்டிக் கூறி நகர்ந்தனர் ; அன்ன வாறே
தனிப்புகழ்ப் போப்புப் பெம்மான் தகு **லைபீரியசு** விற்கும்
பனித்திகழ் உருவச் சேதிபகர்ந்தனர் பணிவுத் தாயே!

**போப்பரசர் சடங்கு செய்தார்**

எழுமலை விளங்கு ரோமின் எழில்மலை ஒன்(று)**‘எச் குலின்’**
முழுஒளி வீசு கின்ற முன்தோன்றும் பனிபோல் தோன்றி
விழுமிய காட்சி காட்டும் விளைவினை யாரும் கண்டார்
செழுவளப் பற்றுப் போப்பும் சென்றனர் சடங்கு செய்தே!

**தொழிலாளர்கள் ஆவலாய்ப் பணிபுரிந்தனர்**

கோவிலைக் கட்டு தற்காம் கூடத்தின் பரப்பைக் காட்டி
ஆவலாய்த் தொழிலா ளர்கள் அவ்விடம் கடைக்கால் தோண்ட,
ஓவியப் பனியாய் ஓங்கி ஒளிர்ந்தநம் தேவ அன்னை
ஆவிபோல் பரந்தெ ழுந்தே அரியவான் மேலே சென்றார்.

**வானைத் தொட வளர்ந்ததோ?**

போப்புவின் பெயரி னாலே புகழ் **‘லைபீ ரியன்பச் லீக்கா’**
மாப்பெயர் தானும் தூய்மை மாண்புள **எலேனா** என்பார்
வாய்ப்பினால் **’கிரீப்பு மாதா** வளக்கோவில் எனப்பேர் உற்றும்
காப்புடன் விளங்கும் கோயில் கட்டினார் வான்தொ டற்கே!

**அன்னையின் படத்தை எலேனா தந்தார்**

**புனிதர்லூக் கா**வின் கையால் புகழ்பெற வண்ணம் தீட்டித்
தனிச்சிறப் புடைய தாகத் தாயுடன் சேயி ருக்கும்
இனியதாம் காட்சி யோடும் இருக்கின்ற படத்தைத் தூய
பனிமொழி **எலேனா** என்பார் பணிவோடு காத்துத் தந்தார்;

**சுடர் ஒளி வீசுகின்றாள்**

நல்லார்க்கும் பொல்லா தார்க்கும் நல்கிடும் அருள்மா தாவே
பல்லார்க்கும் அன்னை யாகிப் பரமனின் தாயு மாகிக்
கல்லார்க்கும் உரோமகுன் றத்தில் கவின்**‘பனி மாதா’** என்னும்
சொல்வார்க்குப் புகழ்மேற் கொண்டு சுடர்கின்றாள் படர்கின்றாளே!

*மரியே வாழ்க !*



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

நம் திருஅவை, நமது பெருமை - 12

சென்ற இதழ் தொடர்ச்சி...

# நேர்த்தியான நிறுவனம்!



**4. பேராயங்கள் :** மறைமாவட்டங்களில் விவிலியப் பணிக்குழு, மறைக்கல்விப் பணிக்குழு, திருவழிபாட்டுப் பணிக்குழு, கல்விப் பணிக்குழு, நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு எனப் பல்வேறு பணிக்குழுக்கள் இயங்குகின்றன. மறைமாவட்டத்தைப் பின்பற்றி ஒவ்வொரு பங்கிலும் இந்த அனைத்துப் பணிக்குழுக்களும் இயங்குகின்றன. ஒவ்வொரு பணிக் குழுவுக்கும் ஒரு செயலர், குழு உறுப்பினர்கள், தொடர் திட்டமிடல் கூட்டங்கள், செயல்பாடுகள் என மிகவும் சிறப்பாக இப்பணிக் குழுக்கள் செயல்படுகின்றன. இவற்றின் செயல்பாட்டு நேர்த்தியைக் கண்டு வியக்காதவர் இலர்.

ஆனால், பங்கு, மறைமாவட்ட மற்றும் தேசிய அளவிலான இத்தகையப் பணிக்குழுக்கள் அனைத்துமே உரோமையில் திருத்தந்தையின் தலைமையில் இயங்கும் மைய நிர்வாக அமைப்பு முறையைப் பின்பற்றியே செயல்படுகின்றன என்பது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். அங்கே இந்தப் பணிக்குழுக்கள் பேராயம் (Congregation) என அழைக்கப்படுகின்றன. இறைநம்பிக்கைப் பேராயம், அருளடையாளங்கள் மற்றும் திருவழிபாட்டுப் பேராயம், மறைபரப்புப் பேராயம் என பத்துக்கும் மேற்பட்ட பேராயங்கள் இயங்கிவருகின்றன. இவை அனைத்துக்கும் கர்தினால்மார்களே தலைவர்களாகச் செயல்படுகிறார்கள். இப்பேராயங்களின்



வழிகாட்டுதலின்படியே அனைத்துலகத் திருஅவையும் இயங்கி வருகிறது. அதுபோலவே, திருவழிபாட்டில் செய்யப்படும் மாற்றங்கள், விவிலிய மொழிபெயர்ப்பு, மறைபரப்புப் பணிச் செயல்பாடுகள் அனைத்தும் உரோமைப் பேராயங்களின் வழிகாட்டுதல்களின்படியே நடைபெறுகின்றன.

**5. உலகளாவிய செயல்பாடுகள் :** திருத்தந்தையின் கடிதங்கள், அறிவிப்புகள், அழைப்புகள் அனைத்தும் உலகம் முழுவதுமுள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும், அனைத்துக் கத்தோலிக்கர்களாலும் முழு ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுவது இதர சமயங்களை, நிறுவனங்களை, அமைப்புகளை வியப்படையச் செய்கின்றது.




திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அறிவித்த "இறைநம்பிக்கை ஆண்டு" உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது நாம் அறிந்ததே. 2015ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்த "இரக்கத்தின் ஆண்டு", கத்தோலிக்கத் திருஅவையையும் தாண்டி, உலகம் முழுவதுமே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.




திருத்தந்தை பிரான்சிஸ் எழுதும் அனைத்து சுற்றுமடல்களும் கத்தோலிக்கர் மட்டுமல்ல, உலகின் மாந்தர் அனைவரையும் ஈர்க்கின்றன என்பது மிகையல்ல.



**6. அன்பியங்கள் :** திருஅவையின் நிறுவன மேலாண்மையின் சிறிய அலகாக இதுவரை இருந்தவை பங்குகள். ஆனால், இப்போது பங்குகளும் "அன்பியங்கள்" என்னும் சின்னஞ் சிறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால், பங்குகளின் நிர்வாகமும், உறவுப் பரிமாற்றங்களும் இன்னும் விரிவாக்கப் பட்டுள்ளன.

பங்குகளிலுள்ள ஒவ்வொரு குடும்பமும், பங்குத் தந்தையுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. அனைத்துக் குடும்பங்களுக்கும் குடும்பக் கையேடு வழங்கப்பட்டு, குடும்ப விபரங்கள் ஆவணப்படுத்தப்படுகின்றன. இவையும் திருஅவை என்னும் நிறுவனத்தின் நிர்வாக மேலாண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இத்தனை கோடி கத்தோலிக்கர்கள் (1.2 பில்லியன்), அதாவது உலகின் மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியினர், ஒரு மனிதரை - **திருத்தந்தையைத்** தங்களின் ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, அவர் வழிநடப்பது என்பது உலகம் இதுவரையில் வேறெங்கும் காணாத ஒரு சிறப்பு. இத்தனை மக்களையும் ஒரே திருஅவையாகத் தொய்வின்றி பயணம் செய்யத் தூண்டும் ஆற்றல் இறைவன் ஒருவருக்குத்தான் உண்டு என்பதே நம் நம்பிக்கை. அதுவே நம் பெருமை!

**"கிறிஸ் மிலியன்"**

# விவிலியப் போட்டி 95

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மத்தேயு நற்செய்தி (அதிகாரம் 1 மற்றும் 2)**

## கிறிஸ்துமஸ் விழா தொடர்புடையவை

பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1. நேர்மையாளர் | - | ஏரோது |
| 2. இயேசு பிறந்தார் | - | விண்மீன் |
| 3. பாவங்களிலிருந்து மீட்பார் | - | ஞானிகள் |
| 4. இம்மானுவேல் | - | யோசேப்பு |
| 5. தூய ஆவியால் கருவுற்றது | - | பெத்லகேம் |
| 6. குழந்தையை வணங்குவேன் | - | மரியா |
| 7. பொன், சாம்பிராணி, வெள்ளைப் போளம் | - | கடவுள் நம்மோடு |
| 8. வழிகாட்டியது | - | இயேசு |

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.12.2022**

# விவிலியப் போட்டி 94

**நவம்பர் 2022** **விடைக்குறிப்புகள்**

**சீராக்கின் ஞானம் அதிகாரம் 6 முதல் 8 வரை**

| | |
|---|---|
| 1. இன்சொல் | சீஞா 6:5 |
| 2. பொய்பேசும் | சீஞா 7:13 |
| 3. பாதுகாப்பான புகலிடம் | சீஞா 6:14 |
| 4. இறந்தோரைக் | சீஞா 8:7 |
| 5. முதியோரின் | சீஞா 8:9 |
| 6. பெண் பிள்ளைகள் | சீஞா 7:29 |
| 7. குருக்களை | சீஞா 7:31 |
| 8. ஏழைகளுக்கு | சீஞா 7:32 |



கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :

**174**

இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :

**177**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 177**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 114**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. தஸ்நேவிஸ் மாதா அன்பியம் **ஜெனிட்டா**
2. திவ்ய பாலன் அன்பியம் **சகாயராணி தனராஜ்**
3. பாத்திமா மாதா அன்பியம் **ஜஸ்டின் ஸ்நோ குளோரி**
4. இரக்கத்தின் மாதா அன்பியம் **சித்ரா மோத்தா**

**பாராட்டுக்குரியவர்கள் : 110**

5. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**

6. சரோஜா
7. பிருந்தா சார்லஸ்
8. ஜெயா
9. லூக்காஸ் சகாயம்
10. ரீனா மொறாயிஸ்
11. இருதயம்மாள் கபிரியேல்

**அன்னை தெரசா**

12. சுகன் மோனிஷா
13. சுரேஷ் பிரேமா
14. ரெய்சா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**

15. டென்சி
16. ரிஷாலின்
17. நான்சி
18. அவிலா

**கிறிஸ்தரசர்**

19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜூலியட் சாவியோ
22. லூரட் வசந்த்
23. ஃப்ளோரிடா எமிலியன்
24. எஃப்ரின் ஜூலியா

**தஸ்நேவிஸ் மாதா**

25. ஜெனிட்டா

**திவ்யபாலன் அன்பியம்**

26. பிரின்சி

**பாத்திமா மாதா**

27. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
28. ஜெசிந்தா கான்ஸ்டன்
29. ஸ்;டெஃபி ரீகன்
30. மைக்கேல் ஜெனிட்டா
31. ராஜா ரீனா
32. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**

33. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**

34. சகாயம்மாள் பெனடிக்ட்
35. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**

36. டெரன்சியா அரிஸ்டோ
37. அந்தோனிசாமி
38. ட்ரைபேனா

**காவல்தூதர்**

39. வெனிட்டாள்
40. ஜெயா அகஸ்டின்
41. சாந்தி ஆல்ட்ரின்
42. ட்ரினிஷா
43. செகரியா இம்மானுவேல்
44. சார்லட்

**குழந்தை தெரசா**

45. கிறிஸ்டி லிஸ்டன்
46. ஷோபனா கோமஸ்
47. பெனி மொறாயிஸ்
48. பெர்லி டென்சன்
49. அமல விக்டோரியா

**குழந்தை இயேசு**

50. மோனிகா செபாஸ்டின்
51. எமல்டா
52. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**

53. ஃபிலோ கோமஸ்
54. ஜெனோ சேவியர்
55. ரம்யா
56. ரோஸ்லின் தாமஸ்
57. சாண்டினா
58. ஆலிவர் வி.ராயன்
59. சகாயராணி
60. ரஜூலா ஜான்போஸ்கோ

**மணல் மாதா**

61. கெயிட்டன் ஃபர்னான்டோ
62. ரொசாரி கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**

63. எல்சிட்டா
64. ஷீபா

**பனிமய அன்பியம்**

65. மெர்சி கோமஸ்
66. ஜூடு ரதி
67. ஆனி ஜெசிந்தா
68. ஆனந்தி லசிங்டன்

**பவுலடியார்**

69. லீமாரோஸ் ஜாய்
70. ராஜா ரோஸ்லின்
71. ரஸ்கின் வசந்தா
72. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரண மாதா**

73. ஜெனிஷா
74. மெடோனா

**பொம்பெயி மாதா**

75. லூடா கான்ஸ்டன்
76. மாத்யூ கர்டோசா
77. தெரசா பிரகாஷ்
78. இ;ம்மாக்குலேட்
79. ஜான்சி ராணி
80. டிஃபானி அண்டோ
81. டயானா கோமஸ்
82. அந்தோனியம்மாள் மச்சாடோ
83. இந்திரா சதீஷ்

**இராயப்பர்**

84. ஷைனி
85. நேவிசம்மாள்
86. ஜெசிமா கிளாரன்ஸ்
87. டெய்சி

**சவேரியார்**

88. டெலிலா அமலன்
89. ஆரோக்கியராஜ் ஹெலினா
90. ஜோர்னல் ஜென்சி
91. அனுஷ்யா பீட்டர்
92. ரூபா மனுவேல்
93. சகாயம் ஆண்டன்

**செபஸ்தியார்**

94. பிரவீனா
95. ஜெசிலா சேவியர்
96. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**

97. நேசம்
98. ஜூடி ஆரோக்கியராஜ்
99. டிஜேபிஆர் இராயன்
100. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**

101. செலஸ்டின்
102. விஜி சகாயராஜ்
103. எல்சிற்றா ஆனந்த்

**சூசையப்பர்**

104. ரூபி கொர்னேலியுஸ்
105. மென்சி
106. கிறிஸ் ரிஜோ
107. ஜூடி கெஜேந்திரன்
108. ஹேமா சேவியர்
109. மோனிஷா

**திருச்சிலுவை**

110. சரோலின் கில்டன்
111. மேரி கிரேட்டா
112. கயித்தான் ரமணி

**வியாகுல மாதா**

113. கெலிண்டன்
114. ராஜா ஜரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 63

### பரிசு பெறுபவர்கள் : 4

| | |
|---|---|
| 115. சென்னை | **எட்வர்ட்** |
| 116. தூத்துக்குடி அன்னை வேளாங்கன்னி | **செக்கரியா சாமுவேல்** |
| 117. பரமக்குடி | **சீமோன் விமல் சாந்தி** |
| 118. ஆறுமுகனேரி | **தொம்மை அந்தோனி** |

### பாராட்டுக்குரியவர்கள் : 59

**ஆலந்தலை**
119. ஃபொன்சேகா
120. மரியம்மாள்
121. மேரி லோபோ
122. சகாயராணி
**வீரபாண்டியன்பட்டணம்**
123. ஆன்ட்ரின் சில்வேரா
124. ஷாந்தினி
**சேதுக்குவாய்த்தான்**
125. ஞானம் பாலசிங்
**புதியம்புத்தூர்**
126. ஹெலன் அன்னமணி
**சென்னை**
127. கமலஜோதி ஜெயசீலன்
128. ஓஃபிலியா தாமஸ்
**பாளையங்கோட்டை**
129. பிரேமா குணசீலன்
130. டெனிசா ஃபர்னான்டோ
131. சுவர்ணா
132. ரோசி
**கயத்தாறு**
133. அமல்ராஜ்
**உரியூர்குப்பம்**
134. சகோ. லெட்டீசியா
**பெரியகுளம்**
135. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
136. மரிய மதலேன்
137. ஜெர்மேன்
**கோயம்புத்தூர்**
138. சகோ. லூர்க்காஸ்
139. ஆஷா தனசீலன்
**திருமானூர், கும்பகோணம்**
140. பீட்டர்
**அரக்கோணம்**
141. குமாரி சந்திரசேகர்
**திருச்சி**
142. மோனிட்டா கிறிஸ்டி
143. மேத்யூ விவேக்
144. டோனி
**மதுரை**
145. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
146. ஹென்றிதாஸ்
**பாம்பன்**
147. சுதா

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
148. பெனிட்டா
149. சுசீலன்
150. ரமோலா கமிலஸ்
151. ரிமோல்டா
152. ஜேன் கிளைட்டன்
**குருஸ்புரம்**
153. ஆசீர்வாதம்
154. தமிழ்ச் செல்வன்
155. பௌவுசி ஜோ மைக்கேல்
156. டெல்ஃபின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
157. சுகிர்தா
**யூதா ததேயு கோவில்**
158. ரோஸ் சேவியர்
159. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
160. சாந்தினி
161. ரியாலினோ
162. பேபி வால்டர்
163. அன்சிட்டா
164. அனிதா
**லூர்தம்மாள்புரம்**
165. ரெனிஸ்டன் ஜெர்லின்
**சார்லஸ் கோவில்**
166. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
167. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
168. லிஜியா ஃபர்னான்டோ
169. ஜெசிந்தா ஃபர்னான்டோ
**இஞ்ஞாசியார்புரம்**
170. அற்புத செல்வி
171. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
172. விர்ஜின்
173. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
174. சுஜாதா மகேஷ்
**திரேஸ்புரம்**
175. கோல்வின் ஜேசுராஜ்
**பெத்தனி கான்வென்ட்**
176. சகோ. ஜெமினா
**சோடங்கிபாளையம்**
177. பிரான்சிஸ் ஆர்லன்

## உங்கள் கவனத்துக்கு

**பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :**

**93458 16875** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

## மாதம் ஒரு மாதா படம் : 35




**மேக்டலின் ஜெஸி**
வியாகுல மாதா அன்பியம்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 41)

## டிசம்பர் - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.



## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

411. அக்டோபர் மாத இறுதி நாளான 31.10.2022 திங்கள் மாலை பேராலய வளாகத்தில் செபமாலைப் பவனி நடைபெற்றது. தொடர்ந்து, நற்கருணை ஆசீருடன் செபமாலை மாதம் நிறைவுக்கு வந்தது.

412. நவம்பர் மாதத்துக்கான விவிலியப் பாசறை (எண்: 88) 01.11.2022 செவ்வாய் மாலை 06.15க்கு அந்தோனியார் அரங்கத்தில் “இறைவார்த்தையும், உணர்வுகளின் மேலாண்மையும்” என்ற தலைப்பில் நடைபெற்றது. கொட்டிய மழையையும் மீறி 33 பேர் கலந்துகொண்டனர்.

413. இறந்த நம்பிக்கையாளரின் நினைவு நாளான 02.11.2022 புதன் அன்று காலையில் 05.00, 05.45, 06.30, 07.15 ஆகிய நேரங்களில் 4 திருப்பலிகள் நடைபெற்றன. மாலையில் திருப்பலி நடைபெறவில்லை. அன்றைய நாள் பங்கு அலுவலகத்துக்கும், திருப்பொருள் விற்பனையகத்துக்கும் விடுமுறை.

414. தங்கத் தேர் திருப்பணிகளுக்காக 01.11.2022 அன்று ஒரு குழுவினர் கேரளா சென்று தேவையான மரங்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்தனர். மரங்கள் 06.11.2022 அன்று வந்து சேர்ந்தன.

415. **நற்செய்தி அறிவிப்பு**க் காணிக்கை உறைகள் வழக்கம்போல இந்த ஆண்டும் அன்பிய வழிகாட்டிகள் வழியாகக் கொடுத்துவிடப்பட்டன. கடந்த 3 ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு பங்கு மக்கள் தாராளமாகக் காணிக்கை தந்ததால், **ரூ. 1,44,000** மறைமாவட்டத்துக்கு வழங்கப்பட்டது.

416. 19.11.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (25)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. “வேலை வாய்ப்புக்காக காத்திருப்போருக்காக” நடைபெற்ற இவ்வழிபாட்டில் 47 பேருக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

417. கிறிஸ்து அரசர் பெருவிழாவை முன்னிட்டு 20.11.2022 ஞாயிறு காலை 10.30 முதல் மாலை 05.00 வரையில் **தொடர் நற்கருணை ஆராதனை** நடைபெற்றது. அன்பியங்கள் மண்டலங்களாகச் சிறப்பித்த இந்தத் தொடர் ஆராதனையில் தங்கத் தேர் ஆசிகளுக்காக சிறப்புப் பரிந்துரை மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

418. புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டுப் **பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான ஒன்றுகூடல்** 20.11.2022 ஞாயிறு மாலை 06.45க்கு நேவிஸ் அரங்கில் நடைபெற்றது. அழைக்கப்பட்டிருந்த 42 பேரில் 30 பேர் கலந்துகொண்டனர். அனைவருக்கும் 2023ஆம் ஆண்டுக்கான விவிலிய நாள்குறிப்பேடும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.





## பங்கில் நிகழ்ந்தவை



### *வாழ்த்துகின்றோம்*

### 1. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 129. | மிராக்குலின் | மைக்கேல் ராஜா - செல்வஜோதி | 12.11.2022 | பனிமயம் |
| 130. | மேரியோ | மைக்கேல் ராஜா - செல்வஜோதி | 12.11.2022 | பனிமயம் |



### *ஆசி கூறுகின்றோம்*

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 104. | மார்ஷல் - அஞ்சு | வியாகுல மாதா | 11.11.2022 |
| 105. | ஷியாந்த் - அபிதா | குழந்தை தெரசா | 21.11.2022 |
| 106. | ரவின்ஸ் - மேரி வித்யா | சூசையப்பர் | 23.11.2022 |
| 107. | சிபிஸ்டன் - மெக்கினா | ராயப்பர் | 25.11.2022 |

## நடைபெற இருப்பவை

- ★ **முதல் வியாழன் திருமணி ஆராதனை** 01.12.2022 வியாழன் மாலைத் திருப்பலி முடிந்ததும் நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.
- ★ 02.12.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 03.12.2022 சனி புனித சவேரியார் திருவிழாத் திருப்பலி காலை 05.30 மணிக்கு புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.
- ★ 03.12.2022 முதல் சனி அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 17.12.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (26)** நண்பகல் 12.30 முதல் பிற்பகல் 03.00 வரை “குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக” நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 106. | 06.12.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | ஆயத்தம் செய்வோம் |
| 107. | 13.12.2022 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | திருமுழுக்கு யோவான் |
| 108. | 20.12.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்டு ரவி | கிறிஸ்து பிறப்பு விழா |
| 109. | 27.12.2022 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | குடும்பங்களின் ஆசிகள் |
| 110. | 03.01.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | புத்தாண்டு ஆசிகள் |



# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

## தூத்துக்குடி

# 2022 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள்

### 1. கிறிஸ்து பிறப்பு விழா வழிபாட்டு விபரங்கள்



24.12.2022 சனி இரவு 11.00 மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். 11.15 மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் பாடல்கள் இசைக்கப்படும். 11.50 மணிக்கு நள்ளிரவுத் திருப்பலி தொடங்கும்.

மறுநாள் (25.12.2022 ஞாயிறு) காலை 06.30 மணிக்கும், 08.00 மணிக்கும் தமிழில் திருப்பலியும், 09.30 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும் நடைபெறும். காலை 10.30 மணிக்கு திருமுழுக்கு வழங்கப்படும். **மாலை திருப்பலி நடைபெறாது**. மாலை 05.30 மணிக்கு நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும் நடைபெறும்.

### 2. திருமண விழா நாயகர்களின் நன்றித் திருப்பலி



பேராலயப் பங்கைச் சேர்ந்த திருமண பொன்விழா, வெள்ளிவிழா நாயகர்கள், மற்றும் திருமணமாகி 40 ஆண்டுகள், 60 ஆண்டுகள், 70 ஆண்டுகள், அதற்கு மேல் நிறைவு செய்யும் தம்பதியருக்கான சிறப்பு நன்றித் திருப்பலி **27.12.2022 செவ்வாய்** மாலை 05.30 மணிக்குப் பேராலயத்தில் நடைபெறும். திருப்பலியின் நிறைவில் பாராட்டுச் சான்றிதழும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்படும்.



## 3. மாசில்லாக் குழந்தைகள் விழா



மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவை முன்னிட்டு **28.12.2022 புதன்** அன்று **இரண்டாவது திருப்பலி காலை 07.00 மணி**க்கு நடைபெறும். திருப்பலியின் முடிவில் குழந்தைகள் ஆசிர்வதிக்கப்படுவார்கள். பாலன் ஆசீர்வாதம் நடைபெறும்.

## 4. திருக்குடும்ப சபைத் திருவிழா



**திருக்குடும்ப விழா**வாகிய 30.12.2022 வெள்ளி அன்று நமது பங்கின் திருக்குடும்ப சபையினர் தங்கள் சபைத் திருவிழாவைக் கொண்டாடுவர். அன்றைய இரண்டாவது திருப்பலியில் **புதிய பொறுப்பாளர்கள்** பணி ஏற்பதுடன், புதிய உறுப்பினர்களுக்கு நாடா அணிவிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மாலையில் சபையினரின் ஒன்றுகூடல் நடைபெறும்.

## 5. ஆண்டின் இறுதி நாள் நன்றி வழிபாடு

இந்த ஆண்டின் இறுதி நாளான **31.12.2022 சனி** அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும் **நன்றி வழிபாடும்**, தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதனமும் வழங்கப்படும்.

## 6. புத்தாண்டு வழிபாட்டு விபரங்கள்



31.12.2022 சனி **இரவு 11.15** மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். **11.30** மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ்- புத்தாண்டுப் பாடல்கள் இசைக்கப்படும். **12.00** மணிக்கு பேராலய மணிகள் முழங்க, பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் மன்றாடப்படும். பின்னர், புத்தாண்டுத்; திருப்பலி நடைபெறும்.

## 7. புத்தாண்டு காலைத் திருப்பலியில் மேதகு ஆயரின் கரங்களால் புதுநன்மை



01.01.2023 ஞாயிறு அன்று **காலை 06.30** மணிக்குச் காலைத் திருப்பலி நடைபெறும். **காலை 08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்களின் தலைமையில் நடைபெறும் புத்தாண்டு சிறப்புத் திருப்பலியில் குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கப்படும்.

அன்று காலை 09.30 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலி **நடைபெறாது.** மாலையிலும் திருப்பலி நடைபெறாது. மாறாக, மாலை 05.30 மணிக்கு **நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்** நடைபெறும்

## 8. ஆண்டின் முதல் சனி வழிபாட்டு விபரங்கள்

07.01.2023 ஆண்டின் முதல் சனியாக இருப்பதால், காலை 11.00 மணிக்கு செபமாலையும், 11.30 மணிக்கு சிறப்புத் திருப்பலியும் நடைபெறும்.

மாலை 06.30 மணிக்கு **சப்பரப் பவனி**யும், தொடர்ந்து **நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்** நடைபெறும்.



## 9. திருக்காட்சிப் பெருவிழா

08.01.2023 ஞாயிறு அன்று வழக்கமான திருப்பலிகள் நடைபெறும். மாலை 06.30 மணிக்கு **நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்** நடைபெறும்.

அருள்பணி. குமார்ராஜா




தங்கத்தேர் காணிக்கை வழங்கிவிட்டீர்களா?

உங்களின் காணிக்கைகளை
பங்குத் தந்தையிடம் அல்லது பங்கு அலுவலகத்தில்
கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுங்கள்.




# பனிமய சாட்சியம்

பனிமய சாட்சியம் : 64

## ஸ்வர்னா, தூத்துக்குடி

என் பெயர் ஸ்வர்னா. நான் லயன்ஸ்டவுன் சகாய மாதா பங்கைச் சார்ந்தவள். என் மகள் சென்னையில் படித்து வருகிறாள்.

கடந்த ஜூலை 26, மாதாவின் திருக்கொடியேற்ற நாளன்று இரவு 10 மணிக்கு அலைபேசியில் அழைத்து, வயிற்றுவலி இருப்பதாக கூறினாள். “மாதாவிடம் செபித்துவிட்டு உறங்க செல், நானும் செபிக்கிறேன்” என்று சொன்னேன்.

அடுத்த நாள் காலை 8 மணிக்கு செமஸ்டர் தேர்வு எழுத வேண்டியிருந்தது. எனவே இரவு 11 மணிக்கு மீண்டும் அழைத்து விசாரிக்கும்போது வலி அதிகமாகி வாந்தியும் இருப்பதாக கூறினாள். அறையிலுள்ள மற்ற மாணவிகள் வெவ்வேறு இடங்களில் அமர்ந்து தேர்வுக்குத் தயாரித்து கொண்டிருந்ததால் தொந்தரவு செய்ய விரும்பாது வலியுடன் வேதனைப் பட்டிருக்கிறாள்.

நான் தாயிடம், “தாயே! நீரே உம் மகளை பொறுப்பெடுத்து கொள்ளுங்கள்” என்று அழுது வேண்டினேன். அவ்வேளையில் வேறு அறையை சார்ந்த தோழி தற்செயலாக இவளைத் தேடி வந்தவள் இவளது நிலையை கண்டு மருத்துவமனைக்கு கூட்டி செல்ல ஏற்பாடு செய்ததுடன், தனக்கு அடுத்த நாள் தேர்வு இருந்தபோதும் தானே உடன் சென்று அவளை நன்கு கவனித்து மீண்டும் அழைத்து வந்திருக்கிறாள்.

பனிமயத்தாயே அந்த மகளின் உருவில் வந்து மகளை அக்கறையோடு கவனித்து குணம் தந்த நிகழ்வை எண்ணி தாய்க்கு கண்ணீர் மல்க நன்றி கூறுகிறேன். மிகுந்த தளர்வுற்று இருந்த வேளையிலும் காலையில் தேர்வையும் நல்ல முறையில் எழுதி முடிக்க அருள் கூர்ந்த என் தாய்க்கு கோடான கோடி நன்றி. பனிமய அன்னையே வாழ்க!

# Remembering Your 70th Birthday

"Those who are righteous will be long remembered" (Ps 112:5)

# N. THOMAS JUDIX FERNANDEZ



*A Special Smile, A Special Face,*
*A Special Dad I can't replace,*
*You gave Your Love,*
*Your Whole Life through.*
*A Loving Father is now at rest*
*For each of us he did his Best,*
*His Love was great,*
*His Heart was Kind,*
*A beautiful Memory left behind last 70 Years*

*We Miss you more than Ever*
*Your Guidance and Your Love*
*But we know you are still watching*
*Silently from Above*
*The Love you gave still warm us*
*The way it always will*
*But having left an empty space*
*That time can never fill*
*We know you hear us talk to you*
*We will always Love you, Miss you Dad.*

**BORN ON EARTH**
**29.12.1952**

**BORN IN HEAVEN**
**08.09.2020**

*Deeply Mourned By*

*Wife* : **LUCIA SORIS**
*Son* : **J. GORGHY FERNANDEZ**
*Daughter in Law* : **N. MOFISHA FONSEKA**
*Grand Daughter* : **G. Mariaa Michelle**
*along with Family Members & Friends*

*Plot No. 7/1, Santhanalakshmi Street, Rajeswari Nagar,*
*Selaiyur - Chennai - 600073 - Ph : 9940470826*

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்ந்தது
08.06.1958

உதிர்ந்தது
25.10.2021

## T.A. ஜோசப் கிங்சிலி பிலவேந்திரன்
## பெர்னாந்து (எ) பெல்லா

இரக்கம் நிறைந்த இறைவா!
விண்ணரசின் நித்திய இறையொளியில்
இவ்வான்மா நிறைஅமைதி பெற உம்மை மன்றாடுகிறோம்.

*என்றும் உங்கள் நினைவோடு*

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்கள்**
**உற்றார், உறவினர்**



NINE YEARS ARE OVER, SINCE YOU PASSED AWAY
THE WAY I MISS YOU IS DIFFERENT NOW
I HOPE YOU KNOW HOW MUCH YOU MEANT TO US
I STILL THINK ABOUT YOU EVERYDAY
I JUST LOVE AND MISS YOU DAD
IN MY OWN SPECIAL WAY.

**There will be a requiem mass for the soul of my beloved father @6:30am 13th dec 2022@ OLS church.**

**Fondly remembered and forever missed by Wife Jothi Cardoza & family..**

**BLOOMED**
**09-01-1938**

# 9TH YEAR ANNIVERSARY
# IN LOVING MEMORY OF MY DAD

**WITHERD**
**13-12-2013**

## M.CHELLAM CARDOZA.

**AGE:76**

***SHINY Ph :*** **98421 31493**